RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 70 | மார்ச்.19 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழகத்தில் 3 நாட்களில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.42.65 கோடிக்கு பணம், பொருட்கள் பறிமுதல்

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை: மார்ச்.19-

தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினரால் தற்போது வரை ரூ.42.65 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி கடந்த 15ம் தேதி அறிவிக்கப்பட்டது. அன்றில் இருந்தே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு தலா 9 பறக்கும் படைகள், 9 நிலை கண்காணிப்புக் குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுவதும் 2,160 பறக்கும் படைகள், 2,160 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தற்போது நடைபெற்று வரும் தேர்தல் செலவினக் கண்காணிப்பு மற்றும் அமலாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல்வேறு பிரிவுகளின் கீழ் அதிகாரிகள் கணிசமான அளவு பொருட்களைப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இன்றைய (18 மார்ச்) நிலவரப்படி, பறிமுதல் செய்யப்பட்ட மொத்த மதிப்பு ரூ. 42.65 கோடி ஆகும். தமிழகம் முழுவதும் ரூ. 2.37 கோடி ரொக்கமும், ரூ.0.18 கோடி மதிப்பிலான மதுபானம், ரூ. 2.88 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.16.42 கோடி மதிப்பிலான விலைமதிப்பற்ற உலோகங்கள் மற்றும் ரூ.20.80 கோடி மதிப்பிலான இலவசங்கள் / பிற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் செலவின கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அமலாக்க முகமைகள், சட்டவிரோதப் பணப் புழக்கம், வாக்காளர்களை கவர வழங்கப்படும் இலவசப் பொருட்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## "சாதனைகள், கொள்கை இல்லாதவர்களே ஆபாசங்களை அள்ளி இறைக்கிறார்கள்!"

### முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை: மார்ச்.19-

"சாதனைகளும், கொள்கைகளும் இல்லாதவர்களே ஆபாசங்களையும் அவதூறுகளையும் அள்ளி இறைத்துக் கொண்டிருக்கின்றனர்" என முதல்வர் ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.




அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.வி.சண்முகம், திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் பெண்கள் பற்றி சர்ச்சையாக பேசியதற்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "இரண்டு மேடைகளில் எது தமிழ்நாட்டுக்கான மேடை? எங்கள் மேடைகளில், தமிழ்நாட்டின் எதிர்காலத்தை வடிவமைத்துக் கொண்டிருக்கும் சாதனைகளையும், அவற்றால் பயனடைந்தவர்கள் குறித்தும் தரவுகளோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

மறுபுறம், சொல்வதற்குச் சாதனைகளும் செயல்படுவதற்குக் கொள்கைகளும் இல்லாதவர்கள் ஆபாசங்களையும் அவதூறுகளையும் அள்ளி இறைத்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ்நாட்டு மக்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வளர்ச்சியைத் தரும் விடியலையே நம் மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



## திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு

சென்னை: மார்ச்.18-

திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவிருக்கிறது. மே.4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்சிகள் கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தொகுதிப் பங்கீடுகள் என்று பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திமுகவில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், மதிமுகவுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, கொமதேகவுக்கு 2 தொகுதிகள், மனிதநேய மக்கள் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் இன்று (மார்ச்.18) இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தொகுதிப் பங்கீடு இறுதியானதை அடுத்து செய்தியாளர்களை சந்தித்த மு.வீரபாண்டியன், "கடந்த முறையைவிட இத்தேர்தலில் எங்களுக்கு கூடுதல் இடங்கள் வேண்டும் என்று திமுகவிடம் கோரினோம். ஆனால் 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரியண்ணன் மனப்பாண்மையில் திமுக ஒருபோதும் நடந்தது இல்லை. தொகுதிப் பங்கீடு விவகாரத்தில் திமுக நிர்பந்திக்கவில்லை. கட்டளையிடவில்லை. அழுத்தம் தரவில்லை. மாறாக கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் இணைந்துள்ளதால் தொகுதிகள் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் ஒற்றுமையை சீர்குலைக்க நினைக்கும் பாஜகவை வீழ்த்த வேண்டும் என்பதால் ஓரணியில் சேர்ந்துள்ளோம்." என்றார்.

## பிடிஆர் தொகுதியில் அதிமுகவா, அமமுகவா? ஆர்வமாக எதிர்பார்க்கும் திமுகவினர்

மதுரை: மார்ச்.19-

மதுரை மத்திய தொகுதியில் அதிமுகவா, அமமுகவா? யார் போட்டியிடப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு, திமுக கூட்டணியினரிடையே அதிகமாக உள்ளது.

மதுரை மத்திய தொகுதியில் மூன்றாவது முறையாக திமுகவில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் களம் இறங்குவது உறுதியாகி விட்டது. அதனால், தொகுதி முழுவதும் அமைச்சர், தனது ஆதரவாளர்களை களம் இறக்கி தேர்தல் பணிகளை தொடங்கி விட்டார்.



அவர் கடந்த காலங்களைப்போல் இல்லாமல் வாக்காளர்களின் எதிர்பார்ப்புகளை இந்த முறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பூர்த்திசெய்ய இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு முன்னோட்டமாகத்தான் அவர், தொகுதி முழுவதும் பிளாஸ்டிக் நாற்காலிகளை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

பழனிவேல் தியாகராஜனை எதிர்த்து மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டிடுவது அதிமுகவா?, அமமுகவா? என்றும், யார் வேட்பாளராக போட்டியிடப் போகிறார்கள்? என்ற எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. இதில் அதிமுக கூட்டணியைவிட திமுக கூட்டணியினரே மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கு இத்தொகுதி திமுகவினரிடையே நிலவும் கோஷ்டிப் பூசலும் முக்கியக் காரணம்.

இதுகுறித்து அதிமுக முக்கிய நிர்வாகி ஒருவர் கூறியதாவது: அதிமுகவில் மத்திய தொகுதியில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பேராசிரியர் ஜெயபால், 85வது வட்டச் செயலாளர் ஜெயக்குமாரின் மனைவி கவுன்சிலர் முத்துமாரி, முன்னாள் துணைமேயர் பி.எம்.மன்னன் உள்ளிட்ட சிலரின் பெயர்கள் அடிபடுகின்றன. செல்லூர் கே.ராஜூவின் பரிந்துரை முத்துமாரிக்கே உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதிமுக போட்டியிட்டால் ஜெயபால் அல்லது பி.எம்.மன்னனை நிறுத்த கட்சித் தலைமை ஆலோசிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், பி.எம்.மன்னன், சொந்தப் பணத்தை இறக்க மனமில்லாமல் அதிமுக ஆட்சியை பிடித்தால் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு மாநகராட்சியில் முக்கியப் பதவி கேட்கலாம் என்ற மனநிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அதனால், 'சீட்' பெறுவதற்கு பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், பி.எம்.மன்னன், அமமுகவை சேர்ந்த டேவிட் அண்ணாதுரை போட்டியிட்டால் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு கடும் போட்டியை தரலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. பி.எம்.மன்னன் போட்டியிட்டால் அவருக்கு திமுகவில் கோஷ்டியாக செயல்படுபவர்களின் ஆதரவு மறைமுகமாகக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதனால், அவர்கள் பி.எம்.மன்னனை போட்டியிட வைக்க பழைய கட்சிப் பாசத்தில் வலியுறுத்தி வருகிறார்கள், என்றனர்.

## 5 ஆண்டுகளில் 5 உதவிப் பேராசிரியர்கள் மட்டுமே நியமனம்; உயர்கல்வி துறையை சீரழித்ததே திமுகவின் சாதனை! அன்புமணி

சென்னை: மார்ச்.19-

அரசு உயர்கல்வி நிறுவனங்களை சீரழித்து புதை குழியில் தள்ளியது தான் திமுக அரசின் சாதனை என்று பாமக தலைவர் அன்புமணி குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 2,708 உதவிப் பேராசிரியர்களை நியமிக்கும் அறிவிப்பை கொண்டாட்டமாக வெளியிட்ட திமுக அரசு, வெறும் 5 பேரை மட்டும் அப்பணிக்கு நியமித்து விட்டு மூடு விழா நடத்தியிருக்கிறது. ஐந்தாண்டு ஆட்சியில் வெறும் 5 உதவிப் பேராசிரியர்களை மட்டுமே நியமித்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திமுக அரசு சீரழித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கான அறிவிக்கையை கடந்த ஆண்டு அக்டோபர் 16ம் தேதி வெளியிட்டு, கடந்த ஆண்டு டிசம்பர் 27ம் தேதி போட்டித் தேர்வுகளை நடத்திய ஆசிரியர் தேர்வு வாரியம் நினைத்திருந்தால், அனைத்து நடைமுறைகளையும் நடப்பாண்டு ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்து 2,708 உதவிப் பேராசிரியர்களையும் நியமனம் செய்திருக்க முடியும். ஆனால், மார்ச் 13ம் தேதி வரை வெறும் 5 உதவிப் பேராசிரியர்களை மட்டுமே நியமனம் செய்திருக்கிறது.

மார்ச் 15ம் தேதி தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்து விட்டதால், மீதமுள்ள 2,703 உதவிப் பேராசிரியர்களை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால், உதவிப் பேராசிரியர்களின் நியமனத்திற்கு ஓசையின்றி மூடு விழா நடத்தப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் திமுக அரசு படுதோல்வியடைந்துள்ளது.

மொத்தம் 61 பாடங்களுக்கு உதவிப் பேராசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளில் 42,064 பேர் பங்கேற்றனர். 2025ம் ஆண்டு டிசம்பர் 27ம் தேதியில் போட்டித் தேர்வுகள் முடிவடைந்த நிலையில், அதே நாளில் விடைக்குறிப்புகளை வெளியிட்டு, அடுத்த ஒரு வாரத்தில் அதன் மீதான ஆட்சேபனைகளைப் பெற்று, 2026 ஜனவரி 5ம் நாள் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளைத் தொடங்கியிருந்தால் 20ம் தேதிக்குள் முடித்திருக்க முடியும்.

அடுத்த 10 நாள்களில் சான்றிதழ் சரிபார்ப்புகளை முடித்து தேர்வு செய்யப்பட்டோருக்கு நியமன ஆணைகளை வழங்கியிருக்க முடியும். சமூக நீதியில் அக்கறையுள்ள அரசு அதைத்தான் செய்திருக்கும். ஆனால், திமுக அரசு அதை செய்யவில்லை. போட்டித்தேர்வுகள் நடத்தப்பட்டு, இன்றுடன் 82 நாள்கள் ஆகும் நிலையில், மொத்தமுள்ள 61 பாடங்களில் 5 பாடங்களுக்கான விடைத்தாள்கள் மட்டும் தான் திருத்தப் பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு 13 உதவிப் பேராசிரியர்களை மட்டும் தான் நியமிக்க முடியும். அதிலும் கூட திமுக அரசு செய்த குளறுபடிகளால் 4 பாடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 11 உதவிப் பேராசிரியர்களில் 6 பேருக்கு தகுதி இல்லை என்று கூறி வெறும் 5 பேருக்கு மட்டுமே நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

உண்மையில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்பும் எண்ணம் திமுக அரசுக்கு கொஞ்சமும் இல்லை. இந்த விவகாரத்தில் திமுக அரசின் தோல்வியையும், அலட்சியத்தையும் பாமக தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்ததன் பயனாகவே 2,708 உதவிப் பேராசிரியர்களை நியமிக்கும் அறிவிப்பை திமுக அரசு வெளியிட்டது. அப்போதும் கூட அந்த நியமனங்களை செய்ய திமுக அரசுக்கு மனம் இல்லை. அதைச் சுட்டிக்காட்டி கடந்த பிப்ரவரி 17ம் தேதி அன்று அறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து தான் விடைத்தாள்களைத் திருத்தும் பணி தொடங்கப்பட்டது. பெயரளவில் 5 பேரை மட்டும் நியமித்து விட்டு திமுக ஒதுங்கிவிட்டது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு வந்த 2021ம் ஆண்டில் 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. ஆனால், 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மட்டும் நிரப்பப்படும் என்று திமுக அரசு அறிவித்தது. ஆனால், அதன் பிறகு இரு ஆண்டுகள் ஆகியும் அதற்கான அறிவிப்பைக் கூட திமுக அரசு வெளியிடவில்லை. அதை பாமக சுட்டிக்காட்டிய பிறகு 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 4,000 உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்வதற்கான அறிவிக்கையை வெளியிட்ட திமுக அரசு, அதையும் பல முறை ஒத்திவைத்தது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்படாத நிலையில், 4,000 பேருக்கு பதிலாக 2,708 பேரை தேர்ந்தெடுக்க அறிவிக்கை வெளியிடப்பட்டது. இப்போது அந்த அறிவிப்பும் சுருங்கி வெறும் 5 உதவிப் பேராசிரியர்கள் என்ற அளவுக்கு குறைந்து விட்டது.

திமுக ஆட்சியில் 35 புதிய அரசு கலைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாகவும், 252 புதியப் பாடப்பிரிவுகளைத் தொடங்கியதாகவும் திமுக அரசு தொடர்ந்து கூறி வருகிறது. இதன் மூலம் 28,346 மாணவர் சேர்க்கை இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவே இருந்த 173 பாடப்பிரிவுகளில் 2,008 கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த இடங்களில் கூடுதலாக சேர்க்கப்படும் 30,354 மாணவர்களுக்கு பாடம் நடத்துவதற்காக மட்டும் 1,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இன்னொரு புறம் ஏற்கனவே காலியாக இருந்த 7,000 ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்தைத் தாண்டி விட்டது. இவை அனைத்தையும் நிரப்ப வேண்டும் என்றால், குறைந்தது 10 ஆயிரம் உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், வெறும் 5 பேரை மட்டும் தான் திமுக அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டின் மாணவர்கள் மீதும், அரசு கல்லூரிகள் மீதும் திமுக அரசுக்கு உள்ள அக்கறை அவ்வளவு தான். அரசு கலைக் கல்லூரிகளில் போதிய எண்ணிக்கையில் நிரந்தர உதவிப் பேராசிரியர்கள் இல்லாததால் மாணவர் சேர்க்கைக் குறைந்துள்ளது. நடப்பாண்டில் மொத்தமுள்ள 1.26 லட்சம் மாணவர் சேர்க்கை இடங்களில் 96 ஆயிரம், அதாவது 76.2% இடங்கள் மட்டும் தான் நிரம்பியுள்ளன. திமுக ஆட்சியின் முந்தைய 4 கல்வி ஆண்டுகளிலும் அரசு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்தே வந்திருக்கிறது. இப்படியாக அரசு உயர்கல்வி நிறுவனங்களை சீரழித்து புதைகுழியில் தள்ளியது தான் திமுக அரசின் சாதனையாகும்.

திமுக அரசு செய்த துரோகத்தால் 2,703 பேருக்கு உதவிப் பேராசிரியர் பணி கிடைக்கவில்லை. ஆள் தேர்வு அறிவிக்கையை வெளியிட்டு, அவர்களுக்கு ஆசை காட்டி, போட்டித் தேர்வுகளை நடத்தி, கடைசியில் பணி நியமனம் செய்யாமல் துரோகம் செய்த திமுக அரசை உதவிப் பேராசிரியர் பணிக்கு விண்ணப்பித்தவர்கள் மன்னிக்க மாட்டார்கள். இதற்காக வரும் தேர்தலில் அவர்கள் திமுகவுக்கு தண்டனை வழங்குவார்கள். தேர்தலுக்குப் பிறகு புதிய அரசு பதவியேற்றதும், தேர்வு விடைத்தாள்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு தகுதியுடையை தேர்வர்கள் அனைவருக்கும் உதவிப் பேராசிரியர் பணி நியமன ஆணைகள் வழங்கப்படும்" என்று அன்புமணி கூறியுள்ளார்.



# நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தேர்தல் நடத்தை விதிகள் குறித்து ஆலோசனை கூட்டம்

நீலகிரி, மார்ச்.19-

நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு அனைத்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதி நிதிகளுடன் தேர்தல் நடத்தை விதிகள் குறித்து ஆலோசனை கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு,

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநி திகளுக்

களுடன் தேர்தல் நடத்தை விதிகள் குறித்து ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பொதுத்தேர்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய தேர்தல் நடத்தை விதிகள், சுவிதா மொபைல் ஆப், ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழுவின் பணிகள் ஆகியவைகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், தேர்தல் பணியிலுள்ள பொறுப்பு அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா , கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நாராயணன், வாக்குபதிவு அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் புனிதா (தேர்தல்கள்), தனி வட்டாட்சியர் காயத்ரி (தேர்தல்கள்) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பாடியநல்லூரில் திருவாசக இன்னிசை பெருவிழா

மாதவரம், மார்ச். 19-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி கோயில் மண்டபத்தில் திருவொற்றியூர் கிளை செங்குன்றத்தின் திருவாசக திருக்கூட்டம் ஏற்பாட்டில் திருவாசக இன்னிசை பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவாசக சித்தர் தாமோதரன் ஐயா கலந்துகொண்டு தனது சொந்த குரலில் திருவாசக இன்னிசையுடன் பாடல்களை பாடி பக்தர்களை பக்தி பாவசம் அடையவைக்கனர். இதில் ஏராளமான சிவன் அடியார்கள், சித்தர்கள் அடியார்கள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு பெருவிழாவை சிறப்பித்தனர். முடிவில் அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வமங்கப்பட்டது.





# அரசு பள்ளியில் சர்வதேச கணித தினம்

காளையார் கோவில் மார்ச். 19-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் சர்வதேச கணிதத் தினம் கொண்டாடப்பட்டது. ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி

2026 ஆம் ஆண்டின் சர்வதேச கணித தினம் மார்ச் 14 அன்று கொண்டாடப்படும். யுனெஸ்கோ மற்றும் பன்னாட்டு கணித ஒன்றியம் இணைந்து கொண்டாடும் இந்த ஆண்டின் கருப்பொருள் "கணிதம் மற்றும் நம்பிக்கை" ஆகும். இது மார்ச் 14 இல் (Pi Day) கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தின் நோக்கமானது சமூகத்தில் கணிதத்தின் பங்கை உணர்த்துதல் மற்றும் கணிதம் மீதான ஆர்வத்தை தூண்டுதல் ஆகும். உலகெங்கிலும் பள்ளிகள் அருங்காட்சியகங்கள் மற்றும் நூலகங்களில் சிறப்பு போட்டிகள் விரிவுரைகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றது ன்று சர்வதேச கணிதத் தின சிறப்புரையாற்றினார். மாணவ மாணவிகளுக்கு சர்வதேச கணிதத் தின சிறப்புகள் குறித்தும் கணிதமேதை சீனிவாச ராமானுஜன் குறித்தும் பை (π) மதிப்பு குறித்தும் திரைப்படம் திரையிடப்பட்டது. மாணவி ஆஷா நன்றி கூறினார்.

# நீலகிரி மாவட்டத்தில்தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொள்ளப்பட்டுவரும் வாகன சோதனை நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர்மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, மார்ச்.19-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர்கள் மேற்கொள்ளப்படும் வாகன சோதனை தணிக்கைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள், நிலையான கண்காணிப்புக் குழுவினர்கள் உள்ளிட்ட குழுவினர்கள் தேர்தல் நடத்தை விதி மீறல்கள் உள்ளதா என தேர்தல் அறிவித்த நாளிலிருந்து தொடர்ந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் நீலகிரி மாவட்டத்தில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொட்டபெட்டா,

110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கட்டபெட்டு, கோத்தகிரி மற்றும் பிளாக்பிரிட்ஜ் பகுதியில், தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் நிலையான கண்காணிப்புக்

குழுவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன சோதனை தணிக்கைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இந்த தணிக்கையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் , இருசக்கர வாகனம், நான்குசக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் பயனிகள் பேருந்துகளையும் கண்காணிப்பு பணிகளை தீவிரபடுத்துமாறு சம்மந்தப்பட்ட குழுவினரை அறிவுறித்தி, பயனிகளின் பேருந்தில் குழுவினர்களால் மேற்கொள்ளப்படும் தணிக்கைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பர்வையிட்டார்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியம் குறித்து "எனது இந்தியா எனது வாக்கு" குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை ஆகியோர் தலைமையில் அரசுத்துறை அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் வாக்காளர் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (தேர்தல்) எலன் ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்த செய்தியாளர் N.அன்பரசு சாலை விபத்தில் மூளைச் சாவு அடைந்து அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டுள்ளது. செய்தியாளர் N.அன்பரசு உடலுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நேற்று காலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கல்லூரி முதல்வர் கனக சபை சத்தியபாமா, தமிழ்நாடு வீடியோ போட்டோ சங்க காக்கும் கரங்கள் திட்ட மாநில தலைவர் லிஸீ.கி. சிவகுமார், மாநில பொதுச் செயலாளர் சுரேஷ், மாநில அமைப்பாளர் அசோக், மாநில துணைத்தலைவர் சக்கரவர்த்தி, கிருஷ்ணகிரி மாவட்ட பிரஸ் கிளப் தலைவர் குமரேசன், செயலாளர் திரு லோக சந்தர் உள்ளிட்ட, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள் செவி லியர்கள், செய்தியாளர்கள், புகைப்பட சங்க மாநில முன்னாள், இந்நாள் நிர்வாகிகள்,புகைப்பட கலைஞர்கள் உடன் இருந்தனர்.



# தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026 முன்னிட்டு தேவதானப்பட்டி பகுதிகளில் கொடி அணிவகுப்பு

தேவதானப்பட்டி.மார்ச். 19-

தேனி மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – 2026 முன்னிட்டு பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களிக்கவும், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை பாதுகாப்பாக நிலைநிறுத்தவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா,உத்தரவின் பேரில் பெரியகுளம் உட்கோட்டம், தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஸி.ஜெரால்ட் அலெக்ஸாண்டர் அவர்கள் தலைமையில் காவல்துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் இணைந்து கொடி அணிவகுப்பு (Flag March) மேற்கொண்டனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்ரு2026 முன்னிட்டு, திருமங்கலம் அரசு கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் கலந்து கொண்டார்."சபாநாயகி" கதாபாத்திரம் மூலம் மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். ஆட்சித் தலைவர் ரங்கோலி பார்வையிட்டு, "100% வாக்களிப்போம்" உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள், கேடயங்கள் வழங்கப்பட்டன.

# தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி மார்ச். 19-

தேனி மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் உத்தமபாளையம், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026க்கான தேர்தல் அறிவிப்பு 15.03.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் (Model Code of Conduct)15.03.2026 முதல் அமலுக்கு வந்துள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 201.கம்பம் போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் செய்யப்படும் இடங்கள், வேட்புமனு பரிசீலனை செய்யப்படும் இடங்கள், சிசிடிவி கேமரா பொருத்தும் பணி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பதற்கான பாதுகாப்பு வைப்பறை மற்றும் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கவும், தகவல்களை அறிந்துகொள்ளவும் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகள் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான பல்வேறு முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு. பணிகளை தொய்வின்றி மேற்கொளுமாறு மாவட்ட தேர்தல் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வாய்வுகளில் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையத் முகைதீன் இப்ராஹிம், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் /வட்டாட்சியர்கள் .சந்திரசேகரன் (போடிநாயக்கனூர்), .பாலசண்முகம் (உத்தமபாளையம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.





# மாற்று கட்சியிலிருந்து 200க்கும் மேற்பட இளைஞர்கள் திமுகாவில் இணைந்தனர்

மாதவரம், மார்ச். 19-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாதவரம் தெற்கு பகுதி 29வது வட்டம் பொன்னியம்மன்மேடு பகுதியைச் சார்ந்த மாற்று கட்சியினர் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.கே.வினோத் ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

# தாம்பரம் சட்டமன்றத் தொகுதி தேமுதிக சார்பில் கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு காலை சிற்றுண்டி வழங்கினார்கள்

தாம்பரம் மார்ச். 19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் அறுவுறுத்தலின்படி மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான மா செழியன் தலைமையில் நடைபெற்ற தாம்பரம் குட் நைட் சென்டரில் காலை சிற்றுண்டி வழங்கினார்கள்





இந்த நிகழ்ச்சியில் மத்திய செயலாளர் பகுதி என்.ஆர்.ஆனாந்த், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, மேற்கு பகுதி அவை தலைவர் செயல் ரவிக்குமார், மத்திய பகுதி அவை தலைவர் பாலாஜி, மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், மத்திய பகுதி துணைச் செயலாளர் சதீஷ்குமார், தெற்கு பகுதி துணைச் செயலாளர் ஐகே தர்மா, மேற்கு பகுதி துணைச் செயலாளர் பவுன்ராஜ், 50வது வார்டு அவைத்தலைவர் வாசிம் ராஜா, பகுதி கழக துணைச் செயலாளர் வள்ளி, மகளிர் அணி துணைச் செயலாளர்கள் திலகா, பானுமதி, பத்மா, மத்திய பகுதி இளைஞரணி துணைச் செயலாளர் ரமேஷ், மற்றும் தேமுதிக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# ஆப்கனின் காபூல் மருத்துவமனை மீது பாகிஸ்தான் தாக்குதல்: 400 பேர் உயிரிழப்பு நடந்தது என்ன?

காபூல், மார்ச்.19-

ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு மருத்துவமனை மீது பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் சுமார் 400 பேர் இறந்ததாக தலிபான் அரசு கூறியுள்ளது.



பாகிஸ்தானுக்கும் அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கும் இடையே சமீப காலமாக மோதல் நிலவி வருகிறது. பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தும் தீவிரவாத அமைப்புகளை கட்டுப்படுத்துமாறு தலிபான் அரசை பாகிஸ்தான் வலியுறுத்துகிறது. ஆனால் தீவிரவாத அமைப்புகளுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தலிபான் அரசு மறுத்து வருகிறது. இந்நிலையில் காபூல் நகரில் உள்ள ஒரு மருத்துவமனை மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து ஆப்கானிஸ்தான் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹம்துல்லா ஃபித்ரத் நேற்று கூறுகையில், ''காபூல் நகரில் போதைப்பொருள் மறுவாழ்வு மருத்துவமனை மீது திங்கட்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில், 2,000 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனையின் பெரும் பகுதி இடிந்ததில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர். சுமார் 250 பேர் காயம் அடைந்தனர்'' என்றார்.

ஆப்கானிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் இந்த தாக்குதலை கண்டித்துள்ளார். இது மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் என்றும் அவர் சாடியுள்ளார்.

இது குறித்து பாகிஸ்தானின் தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தாரார் கூறுகையில், ''ஆப்கானிஸ்தானின் காபூல் மற்றும் கிழக்கு மாகாணமான நங்கர்ஹாரில் உள்ள ராணுவத் தளங்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் துல்லியமான வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இதில் காபூலில் 2 இடங்களில் தொழில்நுட்ப ஆதரவு உள்கட்டமைப்பு மற்றும் வெடி மருந்து சேமிப்பு வசதிகள் அழிக்கப்பட்டன. காபூலில் எந்த மருத்துவமனையும் குறிவைக்கப்படவில்லை. தலிபான் குற்றச்சாட்டு ஆதாரமற்றது'' என்றார்.

இந்தியா கண்டனம்: இந்த தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. ''இது ஒரு கோழைத்தனமான, மனசாட்சியற்ற வன்முறைச் செயல். ஒரு படுகொலையை ராணுவ நடவடிக்கையாக பாகிஸ்தான் சித்தரிக்க முயன்று வருகிறது'' என்று இந்தியா கூறியுள்ளது.

# திராவிட மாடல் ஆட்சியில் பூந்தமல்லி மக்களின் கனவு நனவாகிறது.ரூ.271.91 கோடியில் பாதாள சாக்கடை திட்டம்

சென்னை மார்ச்.19-

பூந்தமல்லி மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கையான பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அடிக்கல் நாட்டப்பட்டிருப்பது, அனைவருக்கும் மகிழ்ச்சியான செய்தியாகும். எல்லாருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்துடன் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி வீறு நடை போட்டு மக்களுக்கான ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.





பூந்தமல்லி நகராட்சியில் செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களில் மணிமகுடமாக பாதாள சாக்கடை திட்டம் உள்ளது.

பூந்தமல்லி மக்களின் பெருங்கனவான பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த உத்தரவிட்டு அனுமதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பூந்தமல்லி மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த திட்டத்தினை தொடங்குவதற்கு நல்வாழ்த்துகள் உறுதுணையாக இருந்து நல்வாழ்த்துகள் தெரிவித்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும், திட்டம் குறித்து ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டியாய் நம்மையெல்லாம் வழி நடத்தி வரும் மாவட்டக் கழக செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவர்களுக்கும் பூந்தமல்லி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பூந்தமல்லி பாதாள சாக்கடை திட்டம் குறித்து பல முறை சட்டமன்றத்தில் பேசியும், முதலமைச்சரிடம் தொடர்ந்து வலியுருத்தி,துறை சார்ந்த அமைச்சர், மற்றும் அமைச்சர் பெருமக்களை சந்தித்து விளக்கி கூறி, அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்று செயல்படுத்த காரணமான மாநில ஆதிதிராவிடர் நல அணி செயலாளர் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ கலந்து கொண்டு பூஜை செய்து வைத்தார். உடன் தலைவர் டாக்டர்.காஞ்சனாசுதாகர்,

மேலும் இந்த திட்டத்தை கொண்டுவர ஆரம்பம் முதல் முயற்சி செய்து நமக்கெல்லாம் உறுதுணையாக இருந்து ஆலோசனைகள் வழங்கி வரும் நமது நகர செயலாளர் ஜி.ஆர். திருமலை அவர்களுக்கும், பல்வேறு வழிகளில் இந்த முயற்சிக்கு ஆதரவாக, ஒத்துழைப்பு கொடுத்து வரும் துணை தலைவர் ஸ்ரீதர்,நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள், திமுக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், நகராட்சி பணியாளர்கள், உள்பட அனைவருக்கும் டாக்டர். காஞ்சனா சுதாகர் பூவிருந்தவல்லி நகர் மன்ற தலைவர் தலைமை பொது குழு உறுப்பினர் நன்றி தெரிவித்தார்.

# தமிழகம், புதுச்சேரியில் ஒரே நாளில் தேர்தல் நடத்துங்கள் தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம்

புதுச்சேரி, மார்ச்.19-

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை தமிழகத்துடன் இணைத்து நடத்தக் கோரி தலைமைத் தேர்தல் ஆணையத்துக்கு திமுக கடிதம் அனுப்பியுள்ளது.




இதுதொடர்பாக புதுச்சேரி திமுக மாநில அமைப்பாளர்சிவா அனுப்பிய கடிதம்: வரலாற்று ரீதியாக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பொதுத் தேர்தல்கள் பெரும்பாலும் ஒரே நாளில் நடத்தப் பட்டு வந்துள்ளன.

இந்த அணுகுமுறையிலிருந்து விலகுவதற்கான காரணங்களை கூற வேண்டும். தற்போதைய புதுச்சேரி சட்டப்பேரவை பதவிக்காலம் வரும் ஜூன் 15 வரை நீடிக்கும். இப்படியிருக்க, தேர்தல் அட்டவணையை முன்கூட்டியே நடத்துவதில் உள்ள அவசரம் குறித்து தெரிவிக்க வேண்டும்.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில், 28 தொகுதிகள் புவியியல் ரீதியாகத் தமிழ்நாட்டுக்குள் அமைந்துள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில், இரண்டு வெவ்வேறு தேதிகளில் வாக்குப்பதிவை நடத்துவது, பிரச்சாரம் என்ற போர்வையில் வெளியாட்கள் நடமாடுவது, வாக்காளர் ஆள்மாறாட்ட அபாயங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் உள்ளிட்ட சவால்களை உருவாக்கக்கூடும்.

புதுச்சேரிக்கு தமிழ்நாட்டின் வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23ல் இணைத்து நடத்த வேண்டும். தமிழகத்தில் வேலை நாளாக வரும் ஏப்.9ம் தேதி புதுச்சேரி வாக்குப் பதிவை நடத்தினால், இங்கிருந்து தமிழகத்தில் பணி புரிவோருக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பை உறுதி செய்ய வேண்டும்.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்யப் போதுமான கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனால் வேட்பு மனு செயல்முறைக்கு நியாயமான காலஅட்டவணையை தரவேண்டும்.

# ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை!



தேனி, மார்ச்.19-

ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. காலை முதல் வெயில் சுட்டெரித்த நிலையில், திடீர் மழையால் குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது

# சென்னை போடி விரைவு ரயில் இனி வாரந்தோறும் 6 நாட்கள் இயக்கம்

சென்னை, மார்ச்.19-

கரூர் வழியாக சென்னை போடிநாயக்கனூர் சென்னை இடையே இதுவரை வாரத்துக்கு 3 நாட்கள் இயக்கப்பட்டு வந்த விரைவு ரயில், நாளை (மார்ச் 19) முதல் வாரத்துக்கு 6 நாட்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் போடிநாயக்கனூர் விரைவு ரயில் (20601) வாரந்தோறும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய 3 நாட்களிலும், போடிநாயக்கனூர் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (20602) வாரந்தோறும் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய நாட்களிலும் இயக்கப்பட்டன. இந்நிலையில், இந்த ரயில்கள் இனி வாரத்தோறும் சனிக்கிழமை தவிர்த்து மற்ற 6 நாட்களும் இயக்கப்படும்.

இதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து இரவு 10.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை சேலம் அதிகாலை 2.55 மணி, நாமக்கல் 3.54 மணி, கரூர் 4.33 மணி, திண்டுக்கல் 5.47 மணி, போடிநாயக்கனூர் 8.50 மணிக்குச் சென்றடையும்.

இதேபோல, போடிநாயக்கனூரில் இருந்து இரவு 8.55 மணிக்குப் புறப்பட்டு திண்டுக்கல் இரவு 11.42, கரூர் மறுநாள் அதிகாலை 12.48, நாமக்கல் அதிகாலை 1.19, சேலம் அதிகாலை 2.20, சென்னை காலை 7.55 மணிக்குச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் அமலான 3 நாட்களில் ரூ.42.65 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல்!

சென்னை, மார்ச்.19-

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் அமலான 3 நாட்களில் ரூ.42.65 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். ரொக்கமாக ரூ.2.37 கோடி, ரூ.2.88 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் ரூ.20.8 கோடி மதிப்பிலான இலவசங்கள்/பிற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், ரூ.18 லட்சம் மதிப்பிலான மதுபானம், ரூ.16.42 கோடி மதிப்புள்ள விலைமதிப்பற்ற உலோகங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்லாவரம் தொகுதியில் பிடிக்கும் அரசியல் சூடு டிவிகே சார்பில் குரோம்பேட்டை வழக்கறிஞர் ஆசியா மகேந்திரன் களமிறங்கினால் திமுகவுக்கு அதிமுகவுக்கு கடும் சவாலா?

பல்லாவரம், மார்ச்.19-

தமிழக சட்டமன்ற தேர்தல் தேதி 23 ஏப்ரல் 2026 என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்ததையடுத்து மாநிலம் முழுவதும் அரசியல் சூழல் சூடுபிடித்துள்ளது குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதியின் அரசியல் கணக்குகள் வேகமாக மாறத் தொடங்கியுள்ளனர் இந்த தேர்தலில் திமுக அதிமுக டிவிகே மற்றும் நாம் தமிழர் கட்சி உட்பட முக்கிய கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை தேர்வு செய்வதில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ள நிலையில் பல்லாவரம் தொகுதி அரசியல் வட்டாரங்களில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது திமுக சார்பில் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மீண்டும் போட்டியிட வாய்ப்பு



அதிகம் என கூறப்படுகிறது ஆளும் கட்சி என்பதாலும் சிறுபான்மை சமூக ஓட்டுகள் மற்றும் நகர்ப்புற வாக்காளர்களின் ஒரு பகுதி இவர்களுக்கு ஆதரவாக இருப்பதாக அவர்கள் பார்வையாளர்கள் கூறுகின்றனர் இருப்பினும் நகர்ப்புற கலப்பு தொகுதியாக உள்ள பல்லாவரத்தில் ஆட்சிக்கு எதிரான மனநிலை உருவாகும் சாத்தியம் இருப்பதாகவும் அதனால் இந்த தொகுதியை முழுமையாக பாதுகாப்பான தொகுதி என கூற முடியாது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது இந்த நிலையில் தமிழக வெற்றிக்காக சார்பில் யார் களமிறங்க போகிறார்கள் என்பது தற்போது அதிகமாக பேசப்படும் கேள்வியாக உள்ளது அதில் முன்னணியில் பேசப்படும் பெயராக குரோம்பேட்டை வழக்கறிஞர் ஆசியா மகேந்திரன் குறிப்பிடப்படுகிறார் பல்லாவரம் தொகுதியில் முழுமையாக ஜாதி ஆதிக்கம் கொண்ட தொகுதி அல்ல இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த மற்றும் வழக்கறிஞர் அதிக அளவில் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் அந்த வகையில் இஸ்லாமியர் சமூகத்தைச் சார்ந்த வழக்கறிஞர் ஆசியா மகேந்திரன் களமிறங்கினாள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு இங்கு வலுவான தேர்தல் வாய்ப்பு உருவாக்கலாம் என மதிப்பிடப்படுகிறது மேலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் டி வி கே சார்பில் அறியப்படும் முக்கிய முகங்களில் ஒருவராக வழக்கறிஞர் ஆசியா மகேந்திரன் பார்க்கப்படுகிறார் மாநில அளவிலும் கட்சியில் அறியப்படும் முகமாக இருப்பதுடன் கட்சி தலைமையுடன் நெருக்கமாக செயல்பட்டு வருபவர் என்றும் கூறப்படுகிறது கட்சியின் பொது செயலாளர் ஆனந்த் அவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவராக இருப்பதால் பல்லாவரம் தொகுதியில் அவருக்கே சீட்டு வழங்கப்படும் வாய்ப்பு அதிகம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது அவருக்கு வாய்ப்பு கிடைத்தால் பல்லாவரம் தொகுதியில் கடுமையான முன்னுரை போட்டி உருவாகும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்

# திருவண்ணாமலையில் சிறுதொழில்களுக்கு புதிய நிதி வாய்ப்பு - ECL ஃபைனான்ஸ் LAP கிளை தொடக்கம்

திருவண்ணாமலை, மார்ச். 19-

எடல் வைஸ் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் வங்கிசாரா நிதி பிரிவான ECL Finance Limited (ECLF), திருவண்ணாமலையில் சிறு தொழில் நிறுவனங்களுக்கான சொத்து மீதான கடன் (LAP) வழங்கும் புதிய கிளையைத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்களில் ஒரே நாளில் 19 புதிய கிளைகளைத் தொடங்கும் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த கிளை திறக்கப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை நகரில் செயல்படும் இந்த கிளை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) நிறுவனங்களுக்கு தேவையான நிதி உதவிகளை எளிமையான முறையில் மற்றும் விரைவாக வழங்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழலைக் கொண்ட திருவண்ணாமலை, புதிய முதலீடுகளுக்கான முக்கிய மையமாக மாறி வருகிறது.

ணிசிலி ஃபைனான்ஸ், வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்கள் போன்ற சொத்துகளை அடமானமாக வைத்து ரூ.50 லட்சம் வரை கடன் வழங்குகிறது. எளிய நடைமுறைகள், விரைவான கடன் மதிப்பீடு மற்றும் துரிதமான நிதி விநியோகம் ஆகியவை இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அஜய் குரானா"வளர்ந்து வரும் வணிகச் சந்தைகளில் கடன் வசதிகளை எளிதாக்குவது எங்கள் முக்கிய நோக்கம். திருவண்ணாமலையில் தொடங்கியுள்ள இந்த புதிய கிளை, MSME நிறுவனங்களுக்கு நேர்த்தியான மற்றும் நெகிழ்வான நிதி ஆதரவை வழங்கும்," என்றார்



# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் விளையாட்டு விழா

காளையார் கோவில் மார்ச். 19-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் நடுநிலைப் பள்ளியில் விளையாட்டு விழா நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் வரவேற்றார். எல் கே ஜி மற்றும் யு கே ஜி மாணவர்களுக்கு முத்து பொறுக்குதல் போட்டியும் ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு தவளை ஓட்டமும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பலூன் உடைத்தல் போட்டியும் நடைபெற்றது. இரண்டு மாணவிகளுக்கு 50 மீட்டர் ஓட்டமும் மாணவர்களுக்கு 100 மீட்டர் ஓட்டம் நடைபெற்றது. ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவிகளுக்கு முறுக்கு கடித்தல் போட்டி நடைபெற்றது. ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப்போட்டி, ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு சாக்கு



ஓட்டமும் மாணவிகளுக்கு ஸ்கிப்பிங் ஓட்டமும் நடைபெற்றது. ஏழு மற்றும் எட்டாம் வகுப்பு மாணவிகளுக்கு பாட்டில் தண்ணீர் நிரப்புதல் போட்டி நடைபெற்றது. எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல் போட்டி நடத்தப்பட்டது. அனைத்து போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு பரிசுகள் ஆண்டு விழாவில் வழங்கப்படுகிறது. அனைத்து போட்டிகளையும் பள்ளி ஆசிரியர்கள் சுரேஷ், காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். விழாவில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், சத்துணவு பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள், காலை சிற்றுண்டி பொறுப்பாளர்கள், மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர். பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார் நன்றி உரை கூறினார்.

# தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை 7 டிகிரி வரை குறைய வாய்ப்பு

சென்னை, மார்ச்.19-

தமிழகத்தில் மார்ச் 22ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் தென் கர்நாடகத்தின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (மார்ச் 19) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 20ம் தேதி கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 21, 22ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 23, 24ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும்



தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் மார்ச் 22ம் தேதி வரை ஓரிரு இடங்களில் வழக்கத்தைவிட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 92 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளத்தில் 9 செ.மீ, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையில் 8 செ.மீ, திருப்பூர் மாவட்டம் வட்டமலை நீர்த்தேக்கம், நாகப்பட்டினம், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 5 செ.மீ, காரைக்காலில் 4 செ.மீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெல்லி அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி, மார்ச்.19-

டெல்லியில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

டெல்லியில் பாலம் என்ற பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் இன்று (மார்ச் 18) காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில், 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்திருப்பதாகவும், மேலும் மூவர் காயமடைந்ததாகவும் டெல்லி காவல் துறை தெரிவித்துள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், நீண்ட போராட்டத்துக்குப் பிறகு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். கட்டிடத்துக்குள் சிக்கியவர்களை அவர்கள் மீட்டனர். முழுமையான விசாரணைக்குப் பிறகே இந்த தீ விபத்துக்கான காரணம் தெரியவரும்.

முதல்வர் ரேகா குப்தா, இந்த தீ விபத்து குறித்து நீதித்துறை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். மேலும் தனது எக்ஸ் பக்கத்தில், குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான தீ விபத்து குறித்து அறிந்து மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானதாக பதிவிட்டுள்ளார்.

# குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் கோடை சீசனை முன்னிட்டு மலர்செடிகள் நடவுப் பணி

## தோட்டக்கலை இணை இயக்குநர் தலைமை வகித்து துவக்கி வைத்தார்

நீலகிரி, மார்ச்.19-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள காட்டேரி பூங்காவில் இந்த ஆண்டு கோடை சீசனுக்கான மலர் செடிகளை நடவு செய்யும் பணி தோட்டக்கலை இணை இயக்குனர் நவநீதா தலைமையில் நடைபெற்றது

ஆண்டுதோறும் ஏப்ரல் மே மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் துவங்குவது வழக்கம் இதில் உதகை தாவரவியல் பூங்கா மற்றும் ரோஜா பூங்கா குன்னூர் சிம்ஸ் பூங்கா காட்டேரி பூங்கா ஆகிய பூங்காக்களில் புதிய மலர் நாற்றுகள் நடவு செய்வது வழக்கம்.



இந்நிலையில் நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காட்டேரி பூங்காவில் இந்த ஆண்டிற்கான மலர் செடிகள் நடவு செய்யும் பணி தோட்டக்கலை இணை இயக்குனர் நவநீதா தலைமையில் நடைபெற்றது.

இதில் மேரி கோல்ட், குட்டை ரகம் பிரெஞ்சு, மற்றும் ஆப்பிரிக்கா வகை பிளாக்ஸ் ஆஸ்டர், பெக்கோனியா வெர்பினா, ஆண்டிரினம், பால்சம் ஸ்வீட் வில்லியம், சால்வியா, போன்ற 30 வகை மலர் விதைகள் ஜெர்மனி பிரான்ஸ் நெதர்லாந்து கொல்கத்தா காஷ்மீர் போன்ற இடங்களில் இருந்து பெறப்பட்டு. மலர் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு இன்று நடவு பணி துவங்கியது.

மேலும் இந்த மலர்கள் அனைத்தும் ஏப்ரல் மூன்றாவது வாரத்தில் இருந்து பூத்துக் குலுங்கும் என்றும் இதனை சுற்றுலாப் பயணிகள் கண்ட ரசிக்கலாம் என்றும் இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக எதிர்பார்க்கலாம் என்றும் தோட்டக்கலை இணை இயக்குனர் நவநீதா தெரிவித்தார்.

# ஒடிசாவில் கொறடா உத்தரவை மீறிய 3 காங். எம்எல்ஏக்கள் நீக்கம்

புவனேஸ்வர், மார்ச்.19-

ஒடிசாவில் 4 மாநிலங்களவை எம்பி பதவிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது. அப்போது பாஜகவை சேர்ந்த மன்மோகன் சமல், சுஜித் குமார், திலீப் ரே ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பிஜு ஜனதா தளத்தில் சான்ட்ரப்ட் மிஸ்ரா வெற்றி பெற்றார். அந்த கட்சியின் மற்றொரு வேட்பாளர் தத்தேஸ்வர் ஹோடா தோல்வி அடைந்தார். மாநிலங்களவைத் தேர்தலில் பிஜு



ஜனதா தளத்துக்கு காங்கிரஸ் ஆதரவு அளித்தது. காங்கிரஸின் 14 எம்எல்ஏக்களில் 3 பேர் அணி மாறி பாஜக வேட்பாளருக்கு வாக்களித்தனர்.

இதைத் தொடர்ந்து ஒடிசா மாநில காங்கிரஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "மாநிலங்களவைத் தேர்தலில் கொறடா உத்தரவை மீறி சோபியா பிர்டஷ், தசரத் காமங்கோ, ரமேஷ் ஜெனா ஆகியோர் பாஜக வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்களித்து உள்ளனர். இதன் காரணமாக 3 எம்எல்ஏக்களும் கட்சியில் இருந்து நீக்கப்படுகின்றனர். கட்சி விதிகளின்படி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சஸ்பெண்ட் செய்யப்பட்ட 3 எம்எல்ஏக்களையும் தகுதி நீக்கம் செய்யும்படி ஒடிசா சட்டப்பேரவைத் தலைவருக்கு காங்கிரஸ் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது




# ரயில் பயணிகளுக்கு விநியோகிக்கப்படும் உணவின் தரம்புகார்கள் குறித்து விளக்கம் அளித்த ரயில்வே அமைச்சகம்

டெல்லி, மார்ச்.19-

நாடு முழுவதும் ஆண்டுக்கு 58 கோடி உணவுப் பொருட்களை பயணிகளுக்கு ரயில்வே விநியோகம் செய்யும் நிலையில், உணவின் தரம், கூடுதல் விலை தொடர்பாக, வெறும் 0.0008% புகார்களே பெறப்பட்டுள்ளதாக மக்களவையில் ரயில்வே அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. புகார்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு கடந்த 3 ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூ.2.6 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தின்னூர் பொதுப்பணித்துறை மாளிகை முகாம் அலுவலகத்தில், 55ஒசூர் மற்றும் 56தளி சட்டமன்ற தொகுதிகளுக்கு, இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள ராகுல் பாண்டே தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, ஒசூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் ஆக்ரிதி சேத்தி, தளி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் பழனி ஆகியோருடன் கலந்துரையாடினார். உடன், ஒசூர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அகூஷ்ய் அனில் வாகாரே உள்ளார்.

# தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு நயினார் நாகேந்திரன் தகவல்

திருநெல்வேலி, மார்ச்.19-

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு நடைபெறும் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிடுவது அல்லது கூட்டணி வைப்பது என்பது அவர்களின் உரிமை. இதைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்தி விட்டேன். திமுக எப்படி கூட்டணி அமைத்து



போட்டியிடுகிறதோ அதேபோல அவர்களும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இதில் நான் கருத்துச் சொல்ல ஏதுமில்லை.

எவ்வளவு பெரிய பணபலம் இருந்தாலும், இந்தியாவை டாட்டாவோ பிர்லாவோ ஆள முடியாது. திமுகவிடம் 50,000 முதல் 60,000 கோடி ரூபாய் பணம் இருக்கலாம், ஆனால் மக்கள் மனம் யாரிடம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்.

5 ஆண்டுகளுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. சொத்து வரி உயர்த்தப்படாது என்று கூறிவிட்டு 300 மடங்கு உயர்த்தியுள்ளனர். மின்கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என கூறிவிட்டு உயர்த்தி விட்டனர். மாதந்தோறும் மின் கணக்கெடுப்பு முறை இன்னமும் அமல்படுத்தப்படவில்லை.

தமிழகத்திற்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு இதுவரை 14 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஆனால், எதையுமே தரவில்லை என தமிழக அரசு பொய் கூறுகிறது. ரேஷன் கடைகளில் மத்திய அரசு இலவசமாக வழங்கும் பொருட்களுக்கு, மாநில அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டித் தங்களது திட்டம் போலக் காட்டி வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது.

தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் 12 நாட்கள் அவகாசம் உள்ளது. பாஜகவின் தேர்தல் பொறுப்பாளர் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வரவுள்ளார். அவர் வந்தவுடன் தொகுதி பங்கீடு குறித்துப் பேசி இறுதி செய்யப்படும். அதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்றார்.

தொகுதி மாறுவது குறித்த விமர்சனங்களுக்கு, வேட்புமனு தாக்கல் செய்த பின்பு இதற்கு பதில் சொல்கிறேன் என்று கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் போர்ச் சூழலால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது திட்டமிட்டு நடத்தப்பட்டது அல்ல. இன்னும் 10 முதல் 15 நாட்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்தார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161